**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S.No.51/2023**

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 09 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 09.12.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மல்லிகா | ஜாதி | : | |
| க/பெயர் | : | ராஜேந்திரன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா. 1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) என் அப்பா பொன்னுசாமி அவர்களும், பிரதிவாதிகளின் தாத்தா சாமிநாதன் அவர்களும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். என் அப்பா பொன்னுசாமி மற்றும் காசியம்மாள் இருவருக்கும் பிரதிவாதிகளின் தகப்பனார் ஞானசுந்தரம் என்பவர் தான் இறுதி சடங்குகள் செய்தார் என்றால் சரிதான். ஊரிலுள்ள நபர்கள் சொன்னதால் செய்தார். தாவா சொத்தானது கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக பிரதிவாதிகள் குடும்பத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

2) தாவா சொத்து என் அப்பா மற்றும் என் அனுபவத்தில் இருக்கிறது என்பதை காட்டகூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 3 அயிட்ட சொத்து சாமிநாதன் என்பவரின் பெயரில் அடங்கல் கணக்கு இருந்து அதற்கு பின்பு எனது பெயரில் எவ்வாறு மாற்றம் செய்யப்பட்டது என்பது குறித்து வழக்குரையில் சொல்லப் படவில்லை என்றால் சரிதான்.

3) சர்வே எண்கள்.224பி/7 மற்றும் 224ஏ/30 ஆகிய சொத்துக்களை பிரதிவாதிகளின் தாத்தா சாமிநாதன் அவரது மகனான பிரதிவாதிகளின் தகப்பனார் ஞானசுந்தரம் அவர்களுக்கு கடந்த 06.11.1986–ல் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் கடந்த 06.01.1987ல் மன்னார்குடி கூட்டுறவு நில வள வங்கிக்கு அடமான ஆவணம் பிரதிவாதி குடும்பத்தினரால் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த அடமான ஆவணம்

கடந்த 20.08.2008–ல் ரத்து செய்யப்பட்டு பிரதிவாதி குடும்பதினர் பெயருக்கு ரசீது ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து என் அப்பா மற்றும் என் குடும்பத்தினர் யாருக்கும் எந்த ஆவணமும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை.

4) நான் என் வழக்குரையில் வரிசை 3 சொத்து விவரத்தில் கண்டுள்ள சர்வே எண்கள். 224ஏ/30ல் சொத்து என் அம்மா காசியம்மாள் பெயரில் கிரையம் வாங்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயாரால் மேற்கண்ட சொத்து கிரையம் வாங்கப்படவில்லை என்றாலும், சர்வே எண்.224ஏ/18 சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் சரியல்ல. கடந்த 1990 ஆம் வருடத்தில் என் அம்மா காசியம்மாள் புல எண்.224ஏ/18 சொத்தின் அனுபவத்தை பிரதிவாதிகளின் தகப்பனார் ஞானசுந்தரத்திற்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. என் அம்மா இறக்கும்வரையில் அவரது அனுபவத்தில் இருந்து வந்தது.

5) புல எண்.224ஏ/18 சொத்துக்கள் பிரதிவாதிகளின் குடும்பத்தில் அனுபவத்தில் கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் இருந்து வந்ததால் தான் வழக்குரையில் தவறான விவரங்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நான் மோசடியான ஆவணங்களை உருவாக்கி என் சகோதரி வசந்தா தெளிவற்ற மனநிலையில் இருந்தவரை எனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு கடந்த 14.12.2022 ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை மோசடியாக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

6) கடந்த 23.06.2023ல் பிரதிவாதிகளின் தாவா சொத்தில் அத்துமிறி நுழைந்து பிரச்சனை செய்ததாக வழக்கு மூலத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக பொய்யான விவரங்களை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் மேற்கண்ட சம்பவம் உண்மையான இருந்து இருந்தால் காவல் நிலையத்தில் அதுகுறித்த புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது கடந்த 45 ஆண்டுகளாக பிரதிவாதிகள் குடும்பத்தில் அனுபவத்தில் இருந்து வரும் நிலையில் தாவா சொத்தின் அனுபவம் என் குடும்பத்தில் எந்த காலத்திலும் இல்லாத நிலையில், தாவா சொத்தின் அனுபவத்தை கேட்டு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.12.11 17:30:21 +0530

District Munsif

Mannargudi.